DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 268/2022**

**அ.சா.– 9**

| | |
|---|---|
| பெயர் : Dr. திரு. பொன்னியின் செல்வன் | கிராமம்: |
| த/பெ. : திரு. பழனிமுத்து | தாலூக்கா : |
| வயது : | ஜாதி : |
| தொழில்: | மதம் : |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 21st day of March, 2024.

( எதிரிகள் 1, 2 ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் தற்பொழுது கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் போதகராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.08.2021ம் தேதி நான் சேலம் அரசு மோகன்குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியிலிருந்தபொழுது அம்மாபேட்டை காவல்நிலைய கு.எண். 338/2021 வழக்கில் சம்மந்தப்பட்ட பிரபு என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்ய அம்மாபேட்டை காவல்நிலைய ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தை த.கா. திரு.பிரபாகரன் என்பவர் மூலம் பெற்று, த.கா. பிரபாகரன் மூலம் பிரேதத்தை அடையாளம் கண்டு அன்றைய தினமே பிற்பகல் 2.40 மணியளவில் பிரேத பரிசோதனை ஆரம்பித்தேன். பிரேத விறைப்பானது உடல் முழுவதும் காணப்பட்டது. வெளிப்புற ஆய்வில் மூக்கிலும் வாயிலும் இருந்து இளஞ்சிவப்பு நிற நுரைகலந்த திரவம் வடிந்து காணப்பட்டது. கை விரல் நகங்கள் நீல நிறத்தில் காணப்பட்டன. எனது பரிசோதனையின்போது பிரேதத்தில் இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள்

1. மூக்கின் வலதுபுற மேல்பகுதியில் 0.3 X 0.2 செ.மீ. அளவில் சிவப்பு நிற சிராய்ப்பு காயம்

2. மேல் உதட்டின் வலது பகுதியில் 0.3 X 0.2 செ.மீ. அளவில் சிவப்பு நிற

சிராய்ப்பு காயம்

3. வாயின் வலதுபுறம் 0.5 X 0.3 செ.மீ. அளவில் சிவந்த நிற சிராய்ப்பு காயம்

4. முகத்தின் தாடையில் இடது கீழ் பகுதியில் 0.5 X 0.3 செ.மீ. அளவில் சிவப்பு நிற சிராய்ப்பு காயம்

5. வலது தோள்பட்டையின் மேல்பகுதியில் 3 X 2 செ.மீ. அளவில் சிவப்பு நிற சிராய்ப்பு காயம். மேற்படி காயத்தைச் சுற்றிலும் 6 X 5 செ.மீ. X தசை ஆழத்திற்கு ஒரு கன்றிய காயம்

6. இடது கை முட்டியின் பின்பகுதியில் 1.5 X 1 செ.மீ. அளவில் சிவப்பு நிற சிராய்ப்பு காயம்

7. இடது கையின் பின்பகுதியில் 1.5 X 1 செ.மீ. அளவில் சிவப்பு நிற சிராய்ப்பு காயம்

8. மேல் உதட்டின் உள்பகுதியில் பல்வேறு சிறிய சிவப்பு நிற சிராய்ப்பு காயங்கள்

பிரேதத்தின்மீது காணப்பட்ட கிழிந்த காயங்கள்

1. மேல் உதட்டின் உள்புற நடுப்பகுதியில் 0.8 X 0.2 X 0.2 செ.மீ. அளவில் ஒரு கிழிந்த காயம்

2. கீழ் உதட்டின் உள்பகுதியில் நடுவில் 0.3 X 0.2 X 0.2 செ.மீ. அளவில் ஒரு கிழிந்த காயம்

உடலில் காணப்பட்ட கன்றிய காயங்கள்

1. நெற்றியின் வலது பக்கவாட்டு பகுதியில் 5 X 2 X 0.5 செ.மீ. அளவில் கன்றிய காயம்

2. நெற்றியின் இடதுபுறம் பக்கவாட்டு பகுதியில் 6 X 3 X 0.5 செ.மீ. அளவில் கன்றிய காயம்

3. வலது உள்ளங்கையின் உள்பகுதியில் 4 X 3 செ.மீ. X தசை ஆழம் அளவில் ஒரு கன்றிய காயம்

பிரேதத்தின் உள்புற ஆய்வில் தலையை திறந்து பார்த்தபொழுது, தலைத்தோல், மண்டைஓடு, மூளையின் சவ்வு ஆகியவை இயல்பான நிலையில் இருந்தன.

மூளையை வெட்டி பார்த்ததில் இரத்தச்செறிவுடன் காணப்பட்டது. மண்டை ஓட்டின் அடிப்பகுதி இயல்பான நிலையில் இருந்தது. கழுத்துப் பகுதியை கூராய்வு செய்ததில் நாவடி எலும்பு இயல்பான நிலையில் இருந்தது.

மார்பு பகுதியை திறந்துபார்த்தபொழுது விலா எலும்புகள் இயல்பான நிலையில் இருந்தன. இரண்டு நுரையீரல்களும் வீங்கியும், பல்வேறு சிறிய இரத்தக் கசிவுகளுடனும் காணப்பட்டன. நுரையீரல்களை வெட்டிப்பார்த்ததில் இரத்த செறிவுடன் காணப்பட்டன. இருதயம் இயல்பான அளவில் இருந்தது. இருதய அறைகளில் இரத்தம் திரவ நிலையில் இருந்தது. இதயத்தின் இரத்தக் குழாய்கள் வால்வுகள், தசைகள் இயல்பான நிலையில் இருந்தன. வயிற்றுப் பகுதியை திறந்துபார்த்தபொழுது இரைப்பையில் 250 கிராம் பாதி செரிமானமான சமைத்த உணவுப் பொருட்கள் எவ்வித நெடியுமின்றி காணப்பட்டது. இரைப்பையின் உட்புற சவ்வு இரத்தம் செறிந்து காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் இயல்பான அளவில் இருந்தன. அவற்றை வெட்டிப் பார்த்ததில் இரத்தச்செறிவுடன் காணப்பட்டன. சிறுநீர் பை காலியாக இருந்தது. பிறப்புறுப்பு இயல்பான நிலையில் இருந்தது. இடுப்பு மற்றும் முதுகு தண்டுவடம் இயல்பான நிலையில் இருந்தது.

உடல் முழுவதும் பல்வேறு இடங்களில் மேலோட்டமாக கிழித்து பார்த்ததில் எவ்வித கன்றிய காயங்களும் காணப்படவில்லை. உடல் உள்ளுறுப்புகளை சேகரித்து இரசாயான பகுப்பாய்விற்கு அனுப்பிவைத்தேன். நான் பிரேத பரிசோதனை செய்த நேரத்திலிருந்து 12 மணி முதல் 24 மணி நேரங்களுக்குள் இறந்திருக்கலாம் என்று கருத்துக்கூறி நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை – **அ.சா.ஆ.–9**. இரசாயன பகுப்பாய்வகத்திலிருந்து பெற்ற அறிக்கையை ( Toxicology Report) பார்வையிட்டேன். அந்த அறிக்கை – **அ.சா.ஆ.–10**. இறந்த நபர் தனது வாய் மற்றும் மூக்கை பொத்தி மூச்சு திணறடிக்கப்பட்டதால் இறந்திருக்கக்கூடும் என்று நான் வழங்கிய இறுதி கருத்துரை – **அ.சா.ஆ.–11**. தலையணை மற்றும் துண்டால் ஒரு நபரின் மூக்கு மற்றும் வாயை அழுத்தினால் அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்படவும், முகம் மற்றும் உடலில் கன்றிய மற்றும் கிழிந்த காயங்கள் ஏற்படவும் அதனால் நான்

இறுதி கருத்துரையில் கூறியதுபோன்று இறப்பு ஏற்படவும் வாய்ப்பு உண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்குவிசாரணை(எதிரிகள் தரப்பில்)</u>:-**

பிரேதத்தின் மூக்கு மற்றும் வாயிலிருந்து வெளியேறிய இளஞ்சிவப்பு நிற நுரைகலந்த திரவத்தை நான் சேகரித்து ஆய்வுக்கு அனுப்பவில்லை. பிரேத விசாரணை அறிக்கையில் மேற்படி இளஞ்சிவப்பு நிற நுரைகலந்த திரவம் எதனால் மூக்கு மற்றும் வாயிலிருந்து வெளியேறியது என்பதற்கான காரணங்களை குறிப்பிடவில்லை. எனது பார்வையில் பிரேதத்தின் முகத்தின்மீது மிளகாய்பொடி தூவியதற்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை. பிரேத பரிசோதனை அறிக்கையில் நான் கண்ணுற்ற காயங்கள் இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

ஒரு நபருக்கு வலிப்பு ஏற்பட்டு தரையில் விழுந்து துடிக்கும்பொழுது மற்றும் கட்டிலில் படுத்திருக்கும்பொழுது பிரேத பரிசோதனை அறிக்கையில் காணப்பட்டுள்ள சிராய்ப்பு காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் நான் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அளவில் சிறிய அளவிலான காயங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லை. மேற்படி காயங்கள் ஏற்பட நான் குறிப்பிட்டதுபோன்று சூழ்நிலைகளில் வாய்ப்பு உண்டு என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க வாய்ப்பு இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கட்டிலில் இருந்து ஒரு நபர் கீழே விழும்பொழுது கன்றிய காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஒரு நபர் தன்னைத்தானே பல்லால் கடித்துக்கொள்ளும்பொழுது நான் உதட்டில் கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லை.

**மறுமுதல்விசாரணை** – இல்லை.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.